363—

புதிய வட்டம்

***7523—திரு. எஸ்.கே. செல்வம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீரபாண்டி தொகுதி, வீரபாண்டியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிவோடு வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களைக் குறிப்பிட்ட பகுதி நிறைவு செய்கின்ற காரணத்தினாலே, வீரபாண்டியை உள்ளடக்கி, சேலம் வட்டத்தைச் சீரமைத்து, புதிய சேலம் தெற்கு வட்டம் அமைப்பது குறித்து முழுமையான முன்மொழிவுகள் பெறப்பட்டவுடன் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. செல்வம் அவர்கள்.*

திரு. எஸ்.கே. செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று பொற்கால ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 'அம்மா' என்கின்ற அற்புதமான திட்டத்தை இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டியாக வருவாய்த் துறைமூலம் அளித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டத்தின்மூலம் அம்மா அவர்களுடைய செயல் திட்டங்களெல்லாம் ஈடேற்றுகின்ற வகையிலே, திட்டங்களை*

நிறைவேற்றும்போது இன்றைக்கு இருக்கின்ற சேலம் வட்டம், கிட்டத்தட்ட 4 சட்டப் பேரவைத் தொகுதிகளை உள்ளடக்கியதாகவும், 13 இலட்சம் மக்கள்தொகை மிகுந்த ஒரு வட்டமாகவும் செயலாற்றிக்கொண்டிருக்கிறது. வீரபாண்டி சட்டப் பேரவைத் தொகுதியைப் பொறுத்தவரையில் 3 இலட்சத்திற்கு மேல் மக்கள்தொகை இருக்கின்ற பகுதி 52 ஊராட்சிப் பகுதிகளையும், 4 பேரூராட்சிப் பகுதிகளையும் உள்ளடக்கி அதிகமாக குக்கிராமங்களைக் கொண்டதாக இருக்கின்றது. அதுவும் இந்த மாவட்டத்திலேயே 3 மருத்துவக் கல்லூரிகளும், 2 பொறியியல் கல்லூரிகளும், 5 தொழில்நுட்பக் கல்லூரிகளும், ஒரு சித்த மருத்துவக் கல்லூரியும், ஓர் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும், 4 தனியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் உள்ளன, சேலத்திற்கே பெருமை சேர்க்கின்ற வகையிலே இந்தத் தொகுதியில் சேலம் இரும்பாலை இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் இத்தனை வாய்ப்புகள் அமைந்து இருக்கின்ற இந்தத் தொகுதியினுடைய மையப் பகுதியில், குறிப்பாக வீரபாண்டி ஒன்றியப் பகுதியில், வீரபாண்டியை மையமாக வைத்து, ஒரு தனி வட்டம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசினுடைய எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்கள், மக்களை விரைந்து சென்று சேர வேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தமிழகத்தில் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இந்த 2 ஆண்டுகளில், 9 புதிய வட்டங்களை உருவாக்கிய சாதனை அரசாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இப்போது விளங்கிக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன புதிய வட்டப் பகுதியானது, அரசினுடைய முழுமையான அளவுகோல்களை நிறைவு செய்கின்றது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.*

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *சேலம் வட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்ற நேரத்தில், பெரும்பாலான பகுதிகள் நகர்ப்புறப் பகுதியையொட்டியே வருகின்ற காரணத்தினாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற வீரபாண்டி பகுதியானது சேலம் மாநகருக்கு வெளியிலே வருகின்ற காரணத்தினாலே, பெரும்பாலான மக்கள் தொலைதூரம் செல்லவேண்டிய நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, பிரிக்கப்படுகிற பகுதியை சேலம் தெற்கு என மையமாக வைத்து, பிரிக்கின்றபோது மக்களுக்கு அது போக்குவரத்துச் சிரமங்களைக் குறைக்கக்கூடிய வகையிலே அமையும் என்று சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கருத்துரு அனுப்பியிருக்கின்றார்கள். இந்தக் கருத்துருவுக்கு மாநில வருவாய் நிருவாக ஆணையருடைய ஒப்புதல் பெறப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. செல்வம் அவர்கள்.*

திரு. எஸ்.கே. செல்வம்: *பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கருத்திற்கு எனது சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 364, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*